வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே கொடுத்து இருக்கக்கூடிய திட்டங்களுக்கு ஆகும் செலவே மிக அதிகமாக இருக்கிறது, என்ற காரணத்தால், இதன் மீது முடிவு எடுக்க சிந்திக்க வேண்டும்.

* 207 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்குட்பட்ட பாதைகள் நில அளவை செய்தல் குறித்து 10—9—1969, 6—2—1970 தேதிகள் இட்ட கடிதம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது நீண்ட காலமாக இருப்பதால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதைகள் செப்பனிடுவதற்கு சர்வே செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்வே செய்வதற்காக ஆகும் தொகையில் 3ல் 2 பங்கு பஞ்சாயத்தில் வசூல் செய்யவேண்டும். 40 தவணைகளில் செலுத்துவதாக முதலில் சொல்லப்பட்டது. 10 ஆண்டு சம பங்கில் கட்டுவதாக இப்போது கேட்கப்பட்டு இருக்கிறது. நகரசபை தனி அலுவலரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thaliyur Co-operative Society

* 208 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a memorandum, dated 8th May 1968 signed by a number of M.L.As. and M.Ps was submitted to the Government urging action against the President of the Thaliyur Co-operative Credit Society (Coimbatore District);

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether in the said memorandum they prayed protection to those who detected the malpractices and reported to the Government; and

(*d*) if so, the action taken by the Government and the extent of protection given ?